**O.S.No. 400/2019**

**PW 2 : அருள்** தேதி 12.02.2026

வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் விவசாயம் செய்கிறேன். அடமானத்திற்கு பணம் கொடுத்த தேதியில் என்னிடம் பணம் இருந்ததிற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. முனியப்பன் பணம் வாங்கி கொணடு வெற்று பேப்பரில் என்னிடம் எழுதி கொடுத்தார். வேறு ஆவணம் எதுவும எழுதி கொடுக்கவில்லை. அடமான பத்திரம் எழுதி கொடுத்தார். என்னிடம் விவசாய பூமி உள்ளதில் இவ்வளவு வருமானம் வருகிறது என்பதை காட்டும் ஆவணம் இல்லை. இதர வருமானம் உள்ளது. என் மகன் ஐ டி யில் பணிபுரிகிறார். என்னுடைய சொந்த வருமானத்தை கொண்டு தான் கடன் கொடுத்தேன். அதற்கான கணக்கு இல்லை. அடமான சொத்தின் விவரம் எனக்கு தெரியாது. அதை யார் அனுபவிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. அடமானம் சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் எதுவும் நான் பார்க்கவில்லை. இந்த வழக்கில் யார் யார் பிரதிவாதிகள் என்றால் தெரியாது. முனியப்பனை மட்டும் தான் தெரியும் மற்ற பிரதிவாதிகளை தெரியாது. 2 ம் பிரதிவாதி ஜெகதீசனுக்கு 3 ம் பிரதிவாதியிடம் என்ன வரவு செலவு இருந்தது என்பது எனக்கு தெரியாது. முனியப்பனுக்கு 3 தவணையாக பணம் கொடுத்தேன் அதற்கு அவர் அடமான பத்திரம் எழுதி கொடுத்தார். முனியப்பன் எனக்கு உறவினர் என்றும் அவர் என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் பெயரளவில் அடமான பத்திரம் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுக்கும் அளவிற்கு பணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ஜெகநாதன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. அடமான சொத்தில் என்ன என்ன வில்லங்கம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதி ஜெகதீசன் தாவா

சொத்தை ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றும் என்னுடைய அடமான பத்திரம் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.